இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 361 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 25 – ஞாயிற்றுக்கிழமை 10 ஆகஸ்ட் 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 361 : Thiruvalluvar Year - 2056 - Aadi 25 - Sunday 10 August 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00


## மாநில கல்விக் கொள்கை மாணவர்களை திறமையுள்ளவர்களாக மாற்றும்!

# இருமொழிக் கொள்கையே நமது உறுதியான கொள்கை!

## தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கையை வெளியிட்டு – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.8.2025) சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், "தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கை 2025" – பள்ளிக்கல்வியை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மரு. சந்தர மோகன், பி., ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்ட இயக்குநர் மரு. எம்.ஆர்த்தி, தாய்பே வர்த்தக மற்றும் கலாச்சார மையத்தின் தலைமை இயக்குநர் ஸ்டீபன் எஸ்.சி. ஷு, மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் இரா.சுதன், பள்ளிக்கல்வி இயக்குநர் ச.கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, ஆக. 10 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.8.2025) சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், "தமிழ்நாடு மாநில கல்விக் கொள்கை 2025 - பள்ளிக் கல்வி"யினை வெளியிட்டு, முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் மடிக்கணினிகளை வழங்கி உரையாற்றுகையில், "மாநில கல்விக் கொள்கை மாணவர்களை திறமையானவர்களாக மாற்றும்!" என்றும், "இரு மொழிக் கொள்கையே நமது உறுதியான கொள்கை!" என்றும் குறிப்பிட்டார்.**

இவ்விழாவில் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

School Studentsயும், இளைஞர்களையும் பார்த்தாலே ஒரு புதிய Energy வந்துவிடும்!

உங்கள் வயதில் Enjoyயும் செய்யலாம்... நன்றாகப் படித்து, சாதித்து, மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாகவும் மாறலாம்! அப்படி, எடுத்துக்காட்டாக மாறியிருக்கக்கூடிய உங்களைப் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

### சிறப்பான, தனித்துவமான விழா!

மாணவர்களைச் சந்திக்கின்ற ஒவ்வொரு முறையும் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லிக்கொண்டே இருக்கிறேன். கொரோனா காலத்தில் நாம் ஆட்சிக்கு வந்தபோதும், அந்தப் பெருந்தொற்றால் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படக் கூடாது என்று "இல்லம் தேடிக் கல்வி" போன்ற முன்னெடுப்புகளை எடுத்து, கல்வி வழங்கினோம்! நாங்கள் உங்கள் மீது வைத்த நம்பிக்கைக்குப் பலன்தான், உங்களின் சாதனைகள்! அதனால்தான், பள்ளிக்கல்வி வரலாற்றில் இதை Special ஆன விழா என்று சொல்கிறோம்! வேறு எந்த மாநிலத்திலும், தங்களின் மாணவர்களுக்கு இப்படிப்பட்ட பாராட்டு விழாக்களை நடத்துகிறார்களா? எனக்குத் தெரிந்து இல்லை! அந்த வகையில், இது சிறப்பான, தனித்துவமான விழா!

திராவிட மாடல் அரசைப் பொறுத்த வரைக்கும், அனைத்து மாணவர்களும் பள்ளிக்கல்வி முடித்து, உயர்கல்வியில் சேர வேண்டும். அதற்கு முதன்மை உயர் கல்வி நிறுவனங்களில் சேரக் கூடிய இந்த மாணவர்கள் Motivationஆக இருக்க வேண்டும் என்றுதான் இந்த விழாவை நடத்துகிறோம்!

### திராவிட மாடல் அரசின் தாய்மை உணர்வே இந்த விழா!

மாணவர்கள் படித்து பெரிய ஆளாக வருவதைப் பார்த்து மகிழ்ச்சி அடைவது, ஒரு தாயின் உணர்வு! இந்த விழாவும், திராவிட மாடல் அரசின் தாய்மை உணர்வுதான்! இந்த ஆண்டு பிளஸ்2 தேர்ச்சி அடைந்த அரசுப் பள்ளி மாணவர்களில், உயர்கல்வியில் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 75 விழுக்காடு! இந்த நம்பரை அடுத்த ஆண்டு இன்னும் அதிகமாக Beat செய்யக்கூடிய அளவுக்கு வரவேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

நம்முடைய இலக்கு 100 சதவீதம். உயர்கல்வியில் சேர்ந்தார்கள் என்பது தான். இந்த இலக்கை எட்ட உங்களைப் போன்ற மாணவர்கள்தான் உதவ வேண்டும். உங்கள் நண்பர்கள், நண்பர்களின் நண்பர்கள் என்று யாராவது College சேரவில்லை என்றால், எந்தச் சூழ்நிலையிலும் அவர்கள் படிப்பை கைவிட்டு விடக் கூடாது என்று சொல்லி, அவர்களை நீங்கள் படிப்பைத் தொடர வைக்க வேண்டும்!

இங்கு வந்திருக்கக்கூடிய நீங்கள் எல்லோரும் பெரிய உயரத்திற்குச் செல்ல இருக்கிறீர்கள்! அந்த உயரத்திற்கு முதல் அடி, College Life! அதிலும் நாட்டிலேயே முதன்மையான கல்வி நிறுவனங்களில் நுழையும்போது, உங்களுக்கு புதுக் கதவுகள் திறக்கும்! புதுச் சூழல் அமையும்! புது அனுபவங்கள் கிடைக்கும்! இது உங்களின் Careerக்கு மிகவும் உதவியாக இருக்கும்!

2022இல் இருந்து கடந்த மூன்றாண்டுகளில், நம்முடைய அரசுப்பள்ளி மாணவர்களில் எத்தனை பேருக்கு முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் இடம் கிடைத்திருக்கிறது என்று தெரியுமா? 977 பேருக்கு இடம் கிடைத்திருக்கிறது! இந்த ஆண்டு மட்டும் எவ்வளவு தெரியுமா? 901. இன்னும் பல உயர்கல்வி நிறுவனங்களில் Admission முடியவில்லை... அதனால், இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாகும் என்று நான் நம்புகிறேன்!

### அரசுப் பள்ளிகள் பெருமையின் அடையாளம்!

இதில் மற்றொரு சிறப்பு என்னவென்றால், கடந்த மூன்று ஆண்டுகளாக ஐ.ஐ.டி. க்குள் Single Digitஇல் நுழைந்து கொண்டு இருந்த நம்முடைய மாணவர்கள், இந்த ஆண்டு 27 பேர் நுழைய இருக்கிறார்கள்! அதாவது double digit. குறிப்பிட்ட சில Departmentஎன்று இல்லாமல் 93 முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் 50 Departmentsஇல், 901 அரசுப் பள்ளி மாணவர்கள் சேருகிறார்கள்! இதில், 150 பேர் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்கள்! இதனால்தான், தம்பி அன்பில் மகேஸ் அடிக்கடி சொல்வார்... "அரசுப் பள்ளிகள் வறுமையின் அடையாளமல்ல! பெருமையின் அடையாளம்!" இந்தப்

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்

## முறைகேடான வாக்காளர் பட்டியல் திருத்தம் பற்றி பழனிசாமி வாய் திறக்காதது ஏன்?

# ஒன்றிய அரசின் கைப்பாவையாகவே தேர்தல் ஆணையம் மாறிவிட்டது!

## பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் கண்டனம்!

**சென்னை, ஆக. 10 -**

**"வாக்காளர் பட்டியல் திருத்தம் என்கிற பெயரில் தமிழ்நாட்டின் அரசியல் உரிமையையே அபகரிக்க நினைக்கிறார்கள்" என்றும், "எடப்பாடி பழனிசாமி தமிழ்நாட்டு வாக்காளர்களையும் டெல்லியிடம் அடமானம் வைக்கத் துணிந்து விட்டாரா?" என்றும், "முறைகேடான வாக்காளர் பட்டியல் திருத்தம் பற்றி பழனிசாமி இதுவரை வாய் திறக்காதது ஏன்?" என்றும் கேள்விகள் கேட்டு கழகப் பொதுச்செயலாளர் - நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

போலி வாக்காளர்களைச் சேர்த்து பா.ஜ.க.விற்குத் துணை போகும் அடிமை அ.தி.மு.க.விற்கு எதிராய் தமிழ்நாடு ஓரணியில் திரண்டு நின்று வெல்லும்!

பொய்களைக் கட்டவிழ்த்து ஆட்சியைப் பிடித்த பா.ஜ.க., தங்களுடைய ஆட்சித்திறனால் மக்களைக் கவர முடியாமல் நாட்டைத் தொடர்ந்து ஆள எத்தனையோ குறுக்கு வழிகளைக் கையாண்டு வருகிறது. தங்களால் வெற்றி பெறவே முடியாத மாநிலங்களில் ஜனநாயகத்தை அழிக்கத் துடிக்கிறது. கடந்த தேர்தல்களில் போலி வாக்காளர்களைச் சேர்த்து, அதன் மூலம் பா.ஜ.க. தனது வெற்றியைச் சாத்தியப்படுத்தியதை மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்கள் ஆதாரங்களோடு வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறார்.

### ஜனநாயகத்துக்கு பேராபத்து!

பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கும் இந்தத் தேர்தல் மோசடி ஆதாரங்கள், தேர்தல் ஆணையம் ஒன்றிய பா.ஜ.க.



அரசின் கைப்பாவையாகவே மாறிவிட்டதை காட்டுகிறது. இது இந்திய ஜனநாயகத்திற்கே பேராபத்து!

2024 நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து, அடுத்த 5 மாதங்களில் நடந்த மகாராஷ்டிரா சட்டமன்றத் தேர்தலின்போது நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்தவர்களை விடக் கூடுதலாக 41 லட்சம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். ஐந்தே மாதங்களில் 41 லட்சம் வாக்காளர்கள் எப்படி வந்தார்கள்.? வானத்திலிருந்து குதித்தார்களா?.

### பா.ஜ.க. - தேர்தல் ஆணையம் கூட்டணி!

2024 நாடாளுமன்றத் தேர்தலில் மகாராஷ்டிராவில் மொத்தம் உள்ள 48 தொகுதிகளில் காங்கிரஸ் கூட்டணி 30 தொகுதிகளை கைப்பற்றியது. பா.ஜ.க. கூட்டணிக்கு 17 இடங்கள்தான் கிடைத்தன. இதனை அப்படியே சட்டமன்றத் தேர்தலில் மாற்றி அமைக்க வேண்டுமெனில் எதையாவது செய்தாக வேண்டும் என்ற முடிவுக்கு வந்து, வாக்காளர் பட்டியலில் தில்லுமுல்லுகளை அரங்கேற்றியது பா.ஜ.க.

6 மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மகாராஷ்டிராவில் தோற்ற பா.ஜ.க. கூட்டணி, அடுத்து வந்த சட்டமன்றத் தேர்தலில் வென்றதற்குக் காரணமே போலியாகச் சேர்க்கப்பட்ட வாக்காளர்கள்தான். கூடுதலாகச் சேர்க்கப்பட்ட 41 லட்சம் வாக்காளர்களால் தேர்தல் முடிவே மாறிப் போனது. நாடாளுமன்றத் தேர்தலில் வென்ற காங்கிரஸ் கூட்டணி, பா.ஜ.க.வும் தேர்தல் ஆணையம் கூட்டணி போட்டுச் செய்த சதித்திட்டத்தால் சட்டமன்றத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டது.

இந்த சதியை அம்பலப்படுத்த வாக்குச்சாவடிகளில் எடுக்கப்பட்ட வீடியோ பதிவுகளை வழங்குமாறு தேர்தல் ஆணையத்தைக் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி அவர்கள் கேட்ட போது வாக்குச்சாவடிகளில் எடுக்கப்பட்ட வீடியோக்களை தேர்தல் நடந்து 45 நாட்களுக்குப் பின் அழித்து விடுமாறு மாநில தேர்தல் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது எனச் சொல்லி வாக்குச்சாவடி கண்காணிப்பு கேமரா பதிவுகளை எல்லாம் அழித்திருக்கிறார்கள்.

இதே பாணியில்தான் வரப்போகிற பீகார் சட்டமன்றத் தேர்தலிலும் மோசடிகளை அரங்கேற்ற பாஜக முயல்கிறது. SIR என்ற சிறப்புத் தீவிரத் திருத்தம் என்ற பெயரில் பீகார் மாநில வாக்காளர் பட்டியலிலிருந்து பா.ஜ.க.விற்கு எதிரான மனநிலை கொண்ட வாக்காளர்கள் பல லட்சம் பேரை நீக்கி யிருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தப்பணி (SIR) என்கிற பெயரில் இந்தியத் தேர்தல் ஆணையம் இந்தியக் குடிமக்களின் அடிப்படை உரிமையான வாக்குரிமையில் கை வைத்திருக்கிறது.

### குறுகிய காலத்தில் திருத்தம் ஏன்?

சுதந்திரமாகச் செயல்பட வேண்டிய தேர்தல் ஆணையம் பா.ஜ.க.வின் கண்ணசைவிற்கும் அரசியல் விருப்பத்திற்கும் ஏற்ப செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இது நாட்டின் ஜனநாயகத்திற்கு விடப்பட்டிருக்கிற மிகப்பெரிய அச்சுறுத்தல். பீகாரில் சில மாதங்களில் தேர்தல் நடைபெற இருக்கிற சூழலில், இவ்வளவு குறுகிய காலத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தம் ஏன்? என எதிர்க் கட்சிகள்

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்